DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 33/2024

PROSECUTION WITNESS L.W.5/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சபரிநாதன் | தகப்பனார் பெயர் | அரசு ரத்தினம் |
| கிராமம் | கருங்கல்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 29.07.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, கருங்கல்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எதிரி கார்த்திக் (எ) கோட்டை கார்த்திக் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **(எதிரி கார்த்திக் (எ) கோட்டை கார்த்திக் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதுலாவது கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

கடந்த 03.06.2023 ம் தேதி மதியம் 03.30 மணி சுமாருக்கு நானும் மோகன்ராஜ் என்பவரும் ஈரோடு, மூலப்பட்டறை அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த போது அங்கு போலீஸ் பார்ட்டியுடன் நின்றிருந்த கருங்கல்பாளைய காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்த எதிரி கார்த்திக் (எ) கோட்டை கார்த்திக் என்பவரை பிடித்து விசாரித்தாரா என்றால் இல்லை. பின்பு தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட எதிரியை எங்கள் முன்னிலையில் கைது செய்தார்களா என்றால் இல்லை. பின்பு போலீசாரிடம் எதிரி கார்த்திக் (எ) கோட்டை கார்த்திக் என்பவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்து எங்களிடம் சாட்சியாக

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.29 17:06:08 +0530

கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. மேற்படி எதிரியை கைது செய்யும் போது அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போதும், உடனிருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எனக்கு தெரியாது என்று மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**
**இல்லை.**
**மறு விசாரணை**
**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.07.29 17:06:14 +0530

Judicial Magistrate No.I,
Erode.